**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்.**
**முன்னிலை :– திரு.S.அன்புதாசன், பி,காம்., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்.**
**2026ம் ஆண்டு ஜீலை திங்கள் 1ம் நாள் புதன்கிழமை**

**IA.No.06/2026 in OS.No.69/2020**

கணேசன் ..... மனுதாரர்/வாதி

–எதிர் –

தெய்வேந்திரன் (இறப்பு)

1. சாந்தி
2. நாகபாண்டி
3. நாகதேவி
4. முத்துச்செல்வி ..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இறுதியாக இன்று(01.07.2026) இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ஒயிட்கென்னடி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனு நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்படலாம் என மேற்குறிப்பு செய்யப்பட்டும், மனு மற்றும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ள திருத்தல் விபரப்படி தாவா அசல் வழக்கு பிராதை திருத்தம் செய்து கொள்ள அனுமதிக்க கேட்டு கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>திருத்தல் விபரம்</u>**

**<u>குறுந்தலைப்பில் திருத்தப்பட வேண்டியவை</u>**

2. நாகபாண்டி

த/பெ. லேட். N.தெய்வேந்திரன்

கள்ளர் தெரு,

அய்யம்பாளையம், 7வது வார்டு,

ஆத்தூர் தாலுகா,

திண்டுக்கல் மாவட்டம்.

**<u>நெடுந்தலைப்பில் திருத்தப்பட வேண்டியவை</u>**

2. திண்டுக்கல் மாவட்டம் , ஆத்தூர் தாலுகா, அய்யம்பாளையம், 7–வது வார்டு, கள்ளர் தெரு என்ற முகவரியில் வசிக்கும் லேட். N.தெய்வேந்திரன் என்பவரின் மகன் இந்து சுமார் வயதுள்ள D.நாகபாண்டி

**2) <u>மனுவுரை சுருக்கம்</u>**

தாவா அசல் வழக்கு எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் மீது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/பிரதிவாதியான தெய்வேந்திரன் இறந்துவிட்ட காரணத்தினால் அவரது வாரிசுகளை அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க கோரி தாக்கல் செய்த I.A.No.4/2025 மனு அனுமதிக்கப்பட்டது.

இந்நிலையில் மேற்படி சேர்க்கப்பட்ட 2–ம் எதிர்மனுதாரர்/2–ம் பிரதிவாதியின் பெயரானது மனுதாரர் தரப்பில் தவறுதலாக நாகபாண்டி என்பதற்குப்

பதிலாக சரவணன் என திருத்தப்பட்டுள்ளது என்பது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கடந்த 09.04.2026–ம் தேதி தாக்கல் செய்யப்பட்ட மெமோ வாயிலாக மனுதாரருக்கு தெரிய வந்தது.

எனவே மேற்படி அசல் வழக்கில் 2–ம் எதிர்மனுதாரர்/2–ம் பிரதிவாதியின் சரியான பெயரான நாகபாண்டி என்ற பெயரை திருத்தம் மேற்கொள்ள வேண்டி இந்த இடையீட்டு மனுவினை தாக்கல் செய்கிறார். மேற்படி திருத்தங்களை செய்ய அனுமதிக்க வேண்டுமென்றும் பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இனி தீர்மானிக்க வேண்டியது யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**4) <u>தீர்வு</u>**

மனுதாரரின் மனு மற்றும் வழக்குக் கோப்பினைப் பரிசீலனை செய்ததில், அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் 2–ஆம் எதிர்மனுதாரர்/2–ஆம் பிரதிவாதியின் பெயர், மனுதாரர் தரப்பினரால் தவறுதலாக **"நாகபாண்டி"** என்பதற்குப் பதிலாக **"சரவணன்"** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, **"சரவணன்"** என்பதற்குப் பதிலாக **"நாகபாண்டி"** என்று திருத்தம் செய்ய அனுமதிப்பது தான் நீதியின் பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவில்**, மனுதாரர் கோரிய படி, மனுவில் கண்டுள்ள திருத்தங்களை செய்ய அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு ஜீலை மாதம் 01 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.07.24 16:46:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நடுவர் ஆத்தூர்.

**மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் இல்லை**

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.07.24 16:46:30 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நடுவர் ஆத்தூர்.